# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 91 /பேரூ/2026**
**நாள் : 21.09.2026**

K. நாகராஜன்,
சிந்தாமணி புதூர்,
கோயம்புத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பள்ளபாளையம் பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் சிந்தாமணி புதூர், திருச்சி சாலை, கதவு .எண். 8ஏ, ரோஸ் கார்டன் என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. நாகராஜன் என்பவரது 18.03.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.03.2026 அன்று பெறப்பட்டு, 91/பேரூ./2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் சிந்தாமணிபுதூர், திருச்சி சாலை, கதவு எண். 8ஏ, ரோஸ் கார்டன் என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. நாகராஜன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 18.03.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

1. கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தாலுகா ஒட்டர்பாளையம் வருவாய் கிராமம் பள்ளபாளையம் பேரூராட்சி sf no.44/IAI.2A2ல் அமைக்கப்பட்டுள்ள மனை இடத்திற்கு ஒட்டர்பாளையம் ஊராட்சி என்ற பெயரில் பதிவு செய்து தரப்பட்டுள்ள போலி தானப்பத்திரம் (ஆவண எண். 15392/2023/07 நவம்பர் 2023படி) மூலம் DTCP துறையால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இணையவழி விண்ணப்ப எண். SEOBM3D5/2024 பழைய விண்ணப்ப எண். P5YXFIDJ/2023.

எங்கள் ஆட்சேபனைக்குப் பின்பு திருத்தப்பட்ட விண்ணப்பம் மற்றும் வரைபடம் அனுமதிக்காக தரப்பட்டது. இதில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளது. இது தொடர்பாக

பள்ளபாளையம் பேரூராட்சி செயல் அலுவலர், சூலூர் வட்டாட்சியர் அலுவலகம், உள்ளூர் திட்ட குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியவற்றோர்களிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

(i) பொது உபயோக இடங்களை தானப்பத்திரம் ஆவண எண். 15392/2023/07 நவம்பர் 2023படி ஒட்டர்பாளையம் ஊராட்சி என்று அரசு ஆவணத்தில் இல்லாத ஊராட்சி பெயரில், போலியான தானப்பத்திரம் உள்நோக்கத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த இடம் பள்ளபாளையம் பேரூராட்சிக்கு உட்பட்டது. சூலூர் தாலுகாவில் ஒட்டர்பாளையம் ஊராட்சி என்பது இல்லை.

இந்த தானப்பத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு பள்ளபாளையம் பேரூராட்சி மன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானம் எண். 111/2023 இதில் 13 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு தீர்மானம் அங்கீகாரம் செய்யப்படுகிறது.

(ii) நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022 நாள் 20.10.2022படி தான சாசனத்தின்படி பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் நில அளவை பதிவேடுகள் மற்றும் நில அளவை ஆவணங்களில் உட்பிரிவு செய்யப்படவில்லை.

(iii) சர்வே எண். 46 அரசு புறம்போக்கு வாய்க்கால் ஆக்கிரமிப்பு செய்து மனையிட அமைப்பாளர்களால் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. நிலவியல் ஓடை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

(iv) பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலையில் ஆக்கிரமிப்பு செய்து, சுற்றுசுவர் அமைக்கப்பட்டு, அனைத்து பொதுமக்களும் பயன்படுத்த முடியாதவாறு தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(v) அணுகுபாலம் வரைபடம் நீர்வளத் துறையின் அனுமதி பெறாமல் தவறாக கட்டப்பட்டுள்ளது.

(vi) மனையிடத்திலிருந்து முறையாக கழிவுநீர் வெளியேறும் வசதி செய்யப்படவில்லை.

(vii) பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. (OSR இடத்திற்கு பணம் செலுத்திய வகையில்)

(viii) மனையிடத்திற்கு மின் இணைப்பு வழங்க மின்கம்பங்கள் அரசு புறம்போக்கு வாய்க்கால் (சர்வே எண். 46) நடுப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதால் நீர்வழிப்பாதை தடைபடுவதுடன், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இயலாமல் உள்ளது).

(ix) க.ச.எண். 51ல் அணுகு சாலைக்காக தரப்பட்ட சாலை பகுதிகள், அதன் மூல ஆவணத்திற்கு முரணாக தானம் பெறப்பட்டு, முறையாக அளவீடு செய்யாமல், மனையிட அமைப்பாளர்களால், நீர்வழிப்பாதை ஆக்கிரமிப்பு செய்து சாலை அமைக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் 18.03.2026 சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த மனுவை விசாரித்து செயல் அலுவலர் மற்றும் தலைவர் திரு. P.S. செல்வராஜ் மற்றும் 12 மன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க, ஆணை பிறப்பிக்க தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

மற்ற ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள் நேரடி விசாரணையின் போது தவறாமல் சமர்ப்பிக்கிறேன் என்பதை உறுதியளிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பள்ளபாளையம் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. பள்ளபாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 12.05.2026 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

<u>கேள்வி 1</u>

பொது உபயோக இடங்களை தானப்பத்திரம் ஆவண எண். 15392/2023/07 நவம்பர் 2023படி ஒட்டர்பாளையம் ஊராட்சி என்று அரசு ஆவணத்தில் இல்லாத ஊராட்சி பெயரில், போலியான தானப்பத்திரம் உள்நோக்கத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

<u>பதில்</u>

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பள்ளபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட ஒட்டர்பாளையம் வருவாய் கிராமம் க.ச.எண். 44/1A2 மற்றும் 44/2A2ல் உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர் (பொ) கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமம், கோயம்புத்தூர் அவர்களின் ம.வ./கோ.உ.திகு எண்.44/2024 நாள் 02.02.2024ன்படி திட்ட அனுமதி எண். 53/2024 நாள் 02.02.2024ன்படி அமையப் பெற்றுள்ள மனைப் பிரிவில் பள்ளபாளையம் பேரூராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பொது இடம் ஒப்படைப்பு தொடர்பான தான பத்திர பதிவு எண். 15392/2023 நாள் 07.11.2023ல் முதல் பக்கத்தில் தமிழ்நாடு மேதகு ஆளுநர் அவர்களுக்காக, கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், ஒட்டர்பாளையம் கிராமம், ஒட்டர்பாளையம் ஊராட்சிக்காக அதன் தற்போதைய தலைவர் அவர்களுக்கு என்று பத்திரம் பதியப்பட்டுள்ளது. இதில் வழங்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பொதுத் திறவிடம் பள்ளபாளையம் பேரூராட்சியின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. ஆகவே இதில் எவ்வித உள்நோக்கமும் இல்லை. மேலும் மேற்படி தானப்பத்திரத்தில் பிழை திருத்தம் செய்து வழங்கக் கோரி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிழை திருத்தம் செய்யப்பட்ட பத்திர நகல் எதிர்வரும் 31.05.2026க்குள் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் சமர்ப்பிக்கப்படும். இதில் எவ்விதத்திலும் போலியாக ஆவணங்கள் ஏதும் வழங்கப்படவில்லை என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>கேள்வி 2</u>

நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022 நாள் 20.10.2022படி தான சாசனத்தின்படி பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் நில அளவை பதிவேடுகள் மற்றும் நில அளவை ஆவணங்களில் உட்பிரிவு செய்யப்படவில்லை.

<u>பதில்</u>

மேலும் பிழை திருத்தம் மாறுதல் செய்த பின்பு அதன் அடிப்படையில் வருவாய்த் துறை ஆவணங்களில் உரிய உட்பிரிவுகள் மாறுதல் செய்து நகல் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் சமர்ப்பிக்கப்படும் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>கேள்வி 3</u>

சர்வே எண். 46 அரசு புறம்போக்கு வாய்க்கால் ஆக்கிரமிப்பு செய்து மனையிட அமைப்பாளர்களால் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. நிலவியல் ஓடை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

<u>பதில்</u>

இது தொடர்பாக வருவாய்த் துறை மற்றும் பொதுப்பணித் துறையினருடன் இணைந்து அளவீடு செய்து வழங்க தொடர் நடவடிக்கையில் உள்ளது. மேற்படி ஆக்கிரமிப்பு இருக்கும்பட்சத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றி மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் விபரம் சமர்ப்பிக்கப்படும் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>கேள்வி 4</u>

பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலையில் ஆக்கிரமிப்பு செய்து, சுற்றுசுவர் அமைக்கப்பட்டு, அனைத்து பொதுமக்களும் பயன்படுத்த முடியாதவாறு தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

<u>பதில்</u>

இது தொடர்பாக வருவாய்த் துறை மற்றும் பொதுப்பணித் துறையினருடன் இணைந்து அளவீடு செய்து ஆக்கிரமிப்பு இருக்கும்பட்சத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றி மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் விபரம் சமர்ப்பிக்கப்படும் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>கேள்வி 5</u>

அணுகுபாலம் வரைபடம் நீர்வளத் துறையின் அனுமதி பெறாமல் தவறாக கட்டப்பட்டுள்ளது.

<u>பதில்</u>

அணுகு பாலம் தொடர்பான விபரங்கள் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதால் மேற்படி பொதுப்பணித் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் சமர்ப்பிக்கப்படும் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>கேள்வி 6</u>

மனையிடத்திலிருந்து முறையாக கழிவுநீர் வெளியேறும் வசதி செய்யப்படவில்லை.

<u>பதில்</u>

மேற்படி மனையிடத்தில் 50 சதவீத வீடுகளுக்கு மேலாக கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் உபயோகத்திற்கு வரும்பொழுது பள்ளபாளையம் பேரூராட்சியின் மூலம் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>கேள்வி 7</u>

பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. (OSR இடத்திற்கு பணம் செலுத்திய வகையில்)

<u>பதில்</u>

மனைப்பிரிவு விதிகளின்படி OSR இடத்திற்கான தொகை தற்போது அரசுக்கு நகர் ஊரமைப்பு துறையின் மூலம் செலுத்தப்படுகிறது. இதில் பள்ளபாளையம் பேரூராட்சியின் பங்கீடு எதுவும் இல்லை என்பதை மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>கேள்வி 8</u>

மனையிடத்திற்கு மின் இணைப்பு வழங்க அமைக்கப்பட்ட மின்கம்பங்கள் அரசு புறம்போக்கு வாய்க்கால் (சர்வே எண். 46) நடுப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதால் நீர்வழிப்பாதை தடைபடுவதுடன், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இயலாமல் உள்ளது.

<u>பதில்</u>

மனையிடத்திற்கு அமைக்கப்பட்ட மின் கம்பங்கள் மின்வாரியத் துறையின் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக மின்வாரியம் மற்றும் பொதுப்பணித் துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விபரம் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் தெரிவிக்கப்படும் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>கேள்வி 9</u>

க.ச.எண். 51ல் அணுகு சாலைக்காக தரப்பட்ட சாலை பகுதிகள், அதன் மூல ஆவணத்திற்கு முரணாக தானம் பெறப்பட்டு, முறையாக அளவீடு செய்யாமல், மனையிட அமைப்பாளர்களால், நீர்வழிப்பாதை ஆக்கிரமிப்பு செய்து சாலை அமைக்கப்பட்டுள்ளது.

<u>பதில்</u>

இப்பொருள் தொடர்பான அனுமதிகள் நகர் ஊரமைப்புத் துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முன் உரிய ஆவணங்களுடன் பதிலறிக்கை சமர்ப்பிக்க கருணை கூர்ந்து ஒரு மாத காலம் அவகாசம் அளித்து உதவுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்".

4. மனுதாரர் திரு. K. நாகராஜன் மற்றும் எதிர்மனுதாரரான பள்ளபாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 16.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.05.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. K. நாகராஜன் மற்றும் அவருக்கு உதவியாக திரு. சுபரங்கராஜன் ஆகியோர் 16.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தங்களது வாக்குமூலத்தை அளித்துள்ளனர். அதில்

- தானப்பத்திரம் ஆவண எண். 15392/2023ல் பள்ளபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட ஒட்டர்பாளையம் என்ற இடத்தை, ஒட்டர்பாளையம் ஊராட்சி என அரசு ஆவணத்தில் இல்லாத ஊராட்சி பெயரில் போலியான தானபத்திரம் உள்நோக்கத்துடன் பதிவு செய்யப்பட்டு, பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- மேற்காணும் தானப்பத்திரத்தின்படி பேரூராட்சிக்கு வழங்கப்பட்ட இடங்கள் நில அளவை பதிவேடுகள் மற்றும் நில அளவை ஆவணங்களில் உட்பிரிவு செய்யப்படவில்லை.
- புல எண். 46ல் உள்ள அரசு புறம்போக்கு வாய்க்காலை ஆக்கிரமித்து தார்சாலை மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.
- பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட 30 அடி சாலையில் ஆக்கிரமிப்பு செய்து சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது.
- அணுகு பாலம், நீர்வளத் துறையின் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது.
- மேற்படி மனையிடத்திலிருந்து கழிவுநீர் வெளியேற வசதி செய்யப்படவில்லை.
- OSR இடத்திற்கு பணம் செலுத்திய வகையில் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.
- புல எண். 46 அரசு புறம்போக்கு வாய்க்காலின் நடுப்பகுதியில் மின்கம்பங்கள் அமைக்கப்பட்டதால் நீர்வழி பாதை தடை ஏற்படுகிறது.
- புல எண். 51ல் தானம் வழங்குபவருக்கு உரிமை இல்லாத பகுதிகள் தானமாக பெறப்பட்டு போலி ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. அணுகு சாலை அமைக்க அளிக்கப்பட்ட தான இடத்திற்கு முரணாக நீர்வழி பாதை ஆக்கிரமித்து சாலை அமைக்கப்பட்டுள்ளது.
- க.எண். 64,63,51 பகுதியில் இணைப்புச் சாலை 23 அடி அகலத்திற்கு குறைவாக 19 அடி அகல சாலை தானமாக பெறப்பட்டுள்ளது.
- மேற்காணும் நிலையில், கீழ்க்காணும் பரிகாரங்கள் கோரப்படுகிறது.

- 1. முற்றிலும் அரசு விதிகளுக்கு முரணாக இந்த மனையிடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த மனை இடத்திற்கு இறுதி ஒப்புதல் பள்ளப்பாளையம் பேரூராட்சி நிர்வாகத்தினரால் தரப்பட்டுள்ளது. இந்த இறுதி ஒப்புதலை ரத்து செய்ய வேண்டுகிறோம்.

- 2. முறைகேடாக பதிவு செய்யப்பட்ட பிழை திருத்த ஆவண எண். 6008/2026 நாள் 18.05.2026 ரத்து செய்திட வேண்டுகிறோம்.

- 3. பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் முறையாக நில அளவீடு செய்து எல்லைக் கற்கள் ஏற்படுத்தப்பட்டு சப் டிவிஷன் செய்ய வேண்டுதல்.

- 4. மனை இடத்தின் மேற்குப் பகுதியில் தென் வடலாக செல்லும் 2 மீட்டர் அகல நிலவியல் ஓடையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றி முறையாக பக்க திறவிடம் 3 மீட்டர் அகலம் ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட்டு தொழில்நுட்ப ஒப்புதல் பெற வேண்டுகிறோம்.

- 5. மனை இட அமைப்பாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள சர்வே எண். 46, நீர்வழிப்பாதை பகுதிகள் சுமார் 12 கோடி ரூபாய் அரசு நிலங்களை விரைவாக மீட்டுத் தர வேண்டுதல்.

- 6. தவறான இடத்தில் முறையாக அனுமதி பெறாமல் அமைக்கப்பட்டுள்ள அணுகு பாலத்தை அகற்றி கொடுக்க வேண்டுகிறோம்.

- 7. மனை இட அணுகு சாலை வசதிக்கென சர்வே எண். 51ல் முறைகேடாக பெறப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவண பத்திர எண். 15054/2021 நாள் 16.12.2021 ரத்து செய்திட ஆவன செய்யுமாறு வேண்டுகிறோம்.
- 8. சர்வே எண்.46ல் மனை இட மின் வசதிக்கென ஆக்கிரமிப்புகளாக அமைக்கப்பட்டுள்ள மின் கம்பங்களை பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலை ஓரங்களில் மாற்றி அமைக்க வேண்டுகிறோம்.

- 9. மனை இடத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர் நேரடியாக பாசன வாய்க்காலில் கலப்பதை தவிர்த்து முறையாக பிரதான கழிவுநீர் கால்வாயில் சென்றடைய வழிவகை செய்ய வேண்டுகிறோம்.

- 10. மனை இட அமைப்பாளர்களால் அனுமதியின்றி மண் அள்ளப்பட்டு சேதப்படுத்தப்பட்ட சர்வே எண். 46ல் வாய்க்கால் கரைகளை முறையாக சீர் அமைத்து தர வேண்டுகிறோம்.

- இதுதொடர்பாக, நான் 314 பக்கங்கள் கொண்ட ஆவணங்களின் நகல்களை இத்துடன் சமர்ப்பிக்கின்றோம்.

எனவே, மேற்காணும் பரிகாரங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

7. எதிர்மனுதாரரான பள்ளபாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. இரா. விஜயபானு மற்றும் அவருடன் பூவலுப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இரா. சுந்தர்ராஜ் ஆகியோர் 16.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை அளித்துள்ளனர்: அதில் –

- தானப் பத்திரம் பதிவு எண். 15392/2023ல் நாள் 07.11.2023ல் தலைவர், ஒட்டர்பாளையம் ஊராட்சிக்காக என தவறுதலாக தான கிரையம் செய்யப்பட்டுள்ளது. தற்போது தானப்பத்திர எண். 6008/2026 நாள் 19.05.2026ன்படி செயல் அலுவலர், பள்ளபாளையம் பேரூராட்சி என பிழை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

- தற்போது தானபத்திர ஆவண எண். 6008/2026 நாள் 19.05.2026ன்படி ஒப்படைக்கப்பட்ட சாலை மற்றும் பொதுத் திறவிடம், நகர் ஊரமைப்புத் துறையினரால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ள வரைப்படத்தில் உள்ள அளவுகளின்படி சாலை 1990.58 சதுர மீட்டர் மற்றும் மின்சார வாரிய ஒதுக்கீடு 25.70 சதுர மீட்டர் மற்றும் பொது ஒதுக்கீடு 32.03 சதுர மீட்டர் தானமாக ஒப்படைக்கப்பட்ட இடங்களை வருவாய்த் துறை ஆவணங்களில் உட்பிரிவு செய்ய இணையதளம் மூலம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அதன் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

- புல எண். 46ல் உள்ள புறம்போக்கு வாய்க்காலை வருவாய்த்துறை மற்றும் பொதுத் துறையினருடன் இணைந்து அளவீடு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. ஆக்கிரமிப்பு குறித்து குறியீடு செய்து அறிக்கை வரப்பெற்ற பின்னர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- பேரூராட்சிக்கு சொந்தமான சாலையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற புகார் குறித்து வருவாய்த் துறை மற்றும் பொதுப்பணித் துறையினருடன் இணைந்து அளவீடு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. ஆக்கிரமிப்பு குறித்து குறியீடு செய்து அறிக்கை வரப்பெற்ற பின்னர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- அணுகு பாலமானது பொதுப் பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதால், மேற்காணும் துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

- மேற்படி மனையிடத்தில் மனைப்பிரிவு உரிமையாளரால் மனைப்பிரிவு முழுவதும் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. 50% வீடுகள் கட்டி முடித்து உபயோகத்தில் வரும்போது, பேரூராட்சி மூலம் கழிவுநீர் கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- மனைப்பிரிவு விதிகளின்படி OSR இடமான 2.5 ஏக்கர் உட்பட்ட மனை பிரிவுகளுக்கு நகர் ஊரமைப்பு துறையிடம் வழிகாட்டி மதிப்பீட்டு தொகையில் 10% மனைப்பிரிவு உரிமையாளரால் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேலும் நகர் ஊரமைப்பு துறை தொழில்நுட்ப அனுமதி வரைபடத்தில் அனுமதிக்கப்பட்ட பொது திறவிடம் (OSR) பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே பேரூராட்சிக்கு எவ்வித வருவாய் இழப்பு ஏற்படவில்லை.

- புல எண். 46 மனையிடத்திற்கு மின்சார வாரியம் மூலம் அமைக்கப்பட்ட மின்கம்பங்களை மாற்றியமைக்க பள்ளபாளையம் பேரூராட்சி ந.கஎண். 351/2026 நாள் 03.06.2026 மூலம் மின் வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

- க.ச.எண். 51ல் அணுகு சாலையானது பத்திரப்பதிவு துறையின் மூலம் பேரூராட்சிக்கு தானமாக பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் குறித்து எவ்வித புகார்களும் வரப்பெறவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

8. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பள்ளபாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. K. நாகராஜன் என்பவர் தனது 18.03.2026 நாளிட்ட முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் தொடர்பாக கீழ்க்காணும் பரிகாரங்கள் கோரப்பட்டுள்ளதை மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

1. தானப்பத்திரம் ஆவண எண். 15392/2023ல் பள்ளபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட ஒட்டர்பாளையம் என்ற இடத்தை, ஒட்டர்பாளையம் ஊராட்சி என அரசு ஆவணத்தில் இல்லாத பெயரில் விதிகளுக்கு முரணாக இந்த மனையிடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த மனை இடத்திற்கு பேரூராட்சி நிர்வாகத்தினரால் அளிக்கப்பட்ட இறுதி ஒப்புதலை ரத்து செய்ய கோருதல்.

2. முறைகேடாக பதிவு செய்யப்பட்ட பிழை திருத்த ஆவண எண். 6008/2026 நாள் 18.05.2026 ரத்து செய்ய வேண்டுதல்.

3. பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் முறையாக நில அளவீடு செய்து எல்லைக் கற்கள் ஏற்படுத்தப்பட்டு சப் டிவிஷன் செய்ய வேண்டுதல்.

4. மனை இடத்தின் மேற்குப் பகுதியில் தென் வடலாக செல்லும் 2 மீட்டர் அகல நிலவியல் ஓடையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றி முறையாக பக்க திறவிடம் 3 மீட்டர் அகலம் ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட்டு தொழில்நுட்ப ஒப்புதல் பெற வேண்டுதல்.

5. மனை இட அமைப்பாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள சர்வே எண். 46, நீர்வழிப்பாதை பகுதிகள் சுமார் 12 கோடி ரூபாய் அரசு நிலங்களை விரைவாக மீட்டுத் தர வேண்டுதல்.

6. தவறான இடத்தில் முறையாக அனுமதி பெறாமல் அமைக்கப்பட்டுள்ள அணுகு பாலத்தை அகற்றி கொடுக்க வேண்டுதல்.

7. மனை இட அணுகு சாலை வசதிக்கென சர்வே எண். 51ல் முறைகேடாக பெறப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவண பத்திர எண். 15054/2021 நாள் 16.12.2021 ரத்து செய்திட ஆவன செய்யுமாறு வேண்டுதல்.

8. சர்வே எண். 46ல் மனை இட மின் வசதிக்கென ஆக்கிரமிப்புகளாக அமைக்கப்பட்டுள்ள மின் கம்பங்களை பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலை ஓரங்களில் மாற்றி அமைக்க வேண்டுதல்.

9. மனை இடத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர் நேரடியாக பாசன வாய்க்காலில் கலப்பதை தவிர்த்து முறையாக பிரதான கழிவுநீர் கால்வாயில் சென்றடைய வழிவகை செய்ய வேண்டுதல்.

10. மனை இட அமைப்பாளர்களால் அனுமதியின்றி மண் அள்ளப்பட்டு சேதப்படுத்தப்பட்ட சர்வே எண். 46ல் வாய்க்கால் கரைகளை முறையாக சீர் அமைத்து தர வேண்டுதல்.

மனுதாரர் தனது வாக்குமூலத்தில் கோரும் பரிகாரங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விவரத்தினை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக கீழ்க்கண்டவாறு தெரிய வருகிறது.

(i) தானபத்திரம் பதிவு எண். 15392/2023, நாள் 07.11.2023ல் தலைவர், ஒட்டர்பாளையம் ஊராட்சி என தவறுலாக தான கிரையம் செய்யப்பட்டுள்ளது.

(ii) ஆனால் மேற்காணும் தவறு நீக்கப்பட்டு தானபத்திர எண். **6008/2026** நாள் **19.05.2026**ல் செயல் அலுவலர், பள்ளபாளையம் பேரூராட்சி என பிழை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பிழை திருத்த பத்திரத்திற்கு பதிவுத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(iii) மேற்காணும் தானபத்திர எண். **6008/2026**ன்படி தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலை மற்றும் பொது திறவிடம் ஆகியவை உட்பிரிவு செய்ய இணையதளம் மூலம் வருவாய்த் துறைக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

(iv) புல எண். **46**ல் உள்ள புறம்போக்கு வாய்க்காலை அளவீடு செய்யும் பணி வருவாய்த் துறை மற்றும் பொது துறை மூலம் நடைபெற்று வருகிறது. ஆக்கிரமிப்பு குறித்து அறிக்கை பெற்றதும் உடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(v) அதே போன்று பேரூராட்சிக்கு சொந்தமான சாலையில் ஆக்கிரமிப்பு குறித்து, வருவாய்த் துறை மூலம் அளவீடு செய்யும் பணி நடைபெற்று வரும் நிலையில், அதன் அறிக்கை பெறப்பட்டு, ஆக்கிரமிப்பு இருப்பின் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(vi) அனுமதியின்றி கட்டப்பட்ட அணுகு பாலமானது பொதுப் பணித்துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அத்துறை மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(vii) புல எண். **51**ல் அணுகு சாலையானது பத்திரப்பதிவு துறையின் மூலம் பேரூராட்சிக்கு தானமாக பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(viii) புல எண். **46** மனையிடத்திற்கு மின்சார வாரியம் மூலம் அமைக்கப்பட்ட மின் கம்பங்களை மாற்றியமைக்க பள்ளபாளையம் பேரூராட்சி மூலம் **03.06.2026** நாளிட்ட கடிதம் மின் வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ix) மனைப்பிரிவு உரிமையாளரால் மனைப்பிரிவு முழுவதும் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ள நிலையில் **50%** வீடுகள் கட்டி முடிக்கப்பட்டதும் பேரூராட்சி மூலம் கழிவுநீர் கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(x) மனைப்பிரிவு விதிகளின்படி OSR இடமான **2.5** ஏக்கர் உட்பட மனைப்பிரிவுகளுக்கு நகர் ஊரமைப்பு துறையிடம் வழிகாட்டி மதிப்பீட்டு தொகையில் **10%** மனைப்பிரிவு உரிமையாளரால் தொகை செலுத்தப்பட்டுள்ளதால் பேரூராட்சிக்கு எவ்வித வருவாய் இழப்பும் ஏற்படவில்லை.

இந்நேர்வில், பிரிவு **12(1)**(d), தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், **2014**ல் வரையறுக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடியும் தானப்பத்திர ஆவண எண்.**6008/2026**, நாள் **19.05.2026**ன்படி தானமாக ஒப்படைக்கப்பட்ட இடங்களை உட்பிரிவு செய்யவும், புல எண் . **46**ல் உள்ள புறம்போக்கு வாய்க்கால் மற்றும் பேரூராட்சிக்கு சொந்தமான சாலைகள் ஆகியவை வருவாய்த் துறை மூலம் அளவீடு செய்யும் பணி முடிவுற்றதும் அதனடிப்படையில் அகற்றிட உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளவும், புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற

அணுகுபாலம் அமைக்கப்பட்டது தொடர்பாக துரிதமாக பொதுப்பணித் துறை மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், அதே போன்று புல எண். 46ல் அமைந்துள்ள மின்கம்பங்களை மாற்றியமைக்க மின்சார வாரியம் மூலம் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மற்றும் மனையிடத்தில் வீடுகள் அமையப் பெற்றதும் மழைநீர் வடிகால்வாயை பேரூராட்சி மூலம் கழிவுநீர் கொண்டு செல்வதற்கு உடனடியான நடவடிக்கை மேற்கொண்டு, அதன் நடவடிக்கையின் அறிக்கையை பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு பள்ளபாளையம் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் தவறான தானப்பத்திரம் பதிய காரணமானவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2026 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. K. நாகராஜன்,
க.எண். 8ஏ, ரோஸ் கார்டன், சிந்தாமணிபுதூர்,
திருச்சி சாலை, கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம் - 641 103.
2. செயல் அலுவலர், பள்ளபாளையம் பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம் 641 103.
3) பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர். 24/9/26

24/9/26

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032